# நினைத்து பார்க்கிறேன் இன்று...



காலம் தான் எத்தனை அசுர வேகத்தில் ஓடி விட்டது...
நாங்கள் சந்தித்து பரிசியபடுத்தக் கொண்டு, பேசி, பழகி
ரம்யமான நாட்கள் அவை அனைத்தும்.
என்னை எனக்காகவே விரும்பிய ஒரு அருமையான தோழி!
என் கை பிடித்து வேதாந்தத்தின் நுழைவாயில்வரை மென்மையாக இட்டு சென்ற அருமையான
சஹோதரி!
ஒரு அழகான உண்மையான நட்பு துளிர் விடும்பொழுதே, அது முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு விட்டது..
எத்தனை தூய்மையான உள்ளம் அவளுக்கு!
எத்தனை உயர்வான கடவுள் பக்தி அவளுக்கு!
வேண்டியவர்க்கு வாரி வழங்கிய அக்ஷயப்பாதிரம் அவள்!
இல்லை என்று வருபவர்க்கு தன்னால் முடிந்ததை ஒரு நிமிடம் கூட தாமதிக்காமல் உதவும் பாரி அவள்!
அன்பிற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த யசோதை அவள்!
கடவுள் பற்றிய சிந்தனையை தன் லட்சியமாக கொண்டு வாழ்ந்த ஒரு தூய்மையான ஆத்மா!
நிஷ்காம்ய சேவை என்ற வார்த்தையை தாரக மந்திரமாக கொண்டு கடைசிவரை வாழ்ந்த ஜீவன்!

சுகந்தமான ஒரு தூய நட்பை கொடுத்த அவளை நினைத்து பார்க்கிறேன் இன்று....

GAYATHRI RAMESH
GRD IYERS

GRD IYERS